# 36. மெய்ப்போதகம்.



## னகரவெதுகைக்கலிவிருத்தம்.

### திருவிராகம். பண் - வியாழக்குறிஞ்சி.

**ஆ**னையி னதளரி யதள்வரி யதளெலும்
பேன வெயிறுகம டமயிலை யினயனம்
மானணி பசுபதி மகன்மயில் வருபெரு
மானடி களைநினை மலைவிலை மனனே. 1

**வா**னவ ரதநிலை யரசல மனுடரும்
ஈன வுயிருமவ னிணையடி யுறவரு
டானரு ளுயர்சர வணபவ னெனுமொரு
கோனடி களைநினை குறைவிலை மனனே. 2

**ஊ**னமி லறிவுள ருளநடு வழிபடு
மீனுறழ் ஞெகிழிகண் மிலைமல ரிணையடி
யானெழில் வயவரி யடிமுனி பணிகுகன்
ஓனட வடிநினை யுலைவிலை மனனே. 3

**வா**னவர் தொழுதிடு மகிமையை யுளபெரு
மானிவ னெனநனி மருவமு னெணியவொர்
கானவர் மகளது களிநுகர் வுறவெதிர்
போனவ னடிநினை புகரிலை மனனே. 4

---

***3. வயவரி யடிமுனி*** = *புலிக்கால் முனிவர்.* ***ஓலிடு நடவடி*** *- ஓல் + நட + அடி = ஓனடவடி எனப் பொருந்திற்று.* ***ஓலிடல்*** *= ஒலித்தல்.*

**மா**னமி லரனடி மலர்களை யெணிவெளி
யானவ ரஞருழி யபயமி டுசமயம்
ஏனென வருமரு ளெழின்மழ மயிலிவர்
கோனடி நினையொரு குறையிலை மனனே. 5

**ஊ**னுக ருணர்வில ருறவற வொழியுயர்
தேனுக ருணர்வுளர் திருமலி யுளமெனும்
வானுழி யவிரருண் மணியெனு மயிலிறை
ஆனகை யடிநினை யலலிலை மனனே. 6

**கூ**னில வனநுதன் மடவரல் குலமணி
ஏனமி லிறையவ ரிடமுறை யுமையவள்
சூனுவெ னுமமுத சுகமுத வொருகுரு
கானடி களைநினை கறையிலை மனனே. 7

**ஆ**னுகொல் கலுடமொ ரளவற வுளவனும்
ஞானநெ டியவயி னணுகுகை யிறையடி
யேனுமு னபயமெ னினஙன மடிமைகொள்
வானவ னடிநினை மமரிமலை மனனே. 8

**நா**னென தெனுமக நலிவுற வனுதினம்
மேனிலை கருதியுய் வியனறி வுடையருள்
ஞானிக ளகநடு நடமிடு மொருபக
வானவ னடிநினை வழுவிலை மனனே. 9

---

*6. **"ஆனகை"** என்பதை ஆல் + நகையெனப்பிரிக்க. ஒலிக்கும் ஆபரணம் எனும் பொருள் பயக்கும். "ஆல லாடுத லொலிப்பேர்" என்பது **லகரவெதுகை.***

*7. **கானடி** எனுந்தொடரிற் "கான்" – நல்மணம்.*

*7, 10 **ஏனம்** = பாவம் ; வடசொல்.*

*8. **ஆணு** "ஆணு" என எதுகை நோக்கிய விகாரமாம். "அரம்பை... ஆணுவே யிரத நன்மை" என **ரகரவெதுகை** நவிறலின் ஆணு – இனிமை, நன்மையெனும் ஒண்பொருள் பயத்தலோர்க. யாணரெனுங் கிளவி ஆணரெனவுமாம். இதன் விகாரமே "ஆணு" என வாயதென்னலாம்.*

**மோ**னர்கள் புகழருண் மொழியரு ணகிரியன்
வானவ ரினுமதி யமுத மதியையுற
ஏனமி லருளரு ளினகுக னெனுமபி
தான னடிகணினை தளையிலை மனனே. 10

மன்மத வருடம் ஆவணி மாதம் 28ஆம் தேதி குருவாரம்.